# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 174/மா/2025
நாள் 11.06.2026

G.A. பாஸ்கரன்,
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

மதுரை–09, காமராஜர் சாலை, கதவு எண் 136A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.A பாஸ்கரன் என்பவரின் 26.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2025 அன்று பெறப்பட்டு 174/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–09, காமராஜர் சாலை, கதவு எண் 136A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. G.A பாஸ்கரன் என்பவர் தனது 26.04.2025 மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண். 136–A, கட்டிடத்தை வரிப்பிரிவினை செய்து கொடுக்கும்படி G.R.பாலகிருஷ்ணன் (1), G.A பாஸ்கரன், G.A விஸ்வநாதன் (2), G.D. குமரேஷ் (3) ஆகிய மூவரும் வரிப்பிரிவினை செய்து கொடுக்கும்படி மனு சமர்ப்பித்தோம். வரிப்பிரிவினை செய்ததில் எனக்கும், எனது சகோதரர் G.A விஸ்வநாதன் ஆகிய இருவருக்கும் சொந்தமான RCC மற்றும் AC Sheet கட்டிடத்திற்கு AC Sheet விகிதத்தில் வரிவிதிப்பு செய்யாமல் தவறுதலாக RCC லாகட கட்டிடத்தின் மதிப்பின் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தவறை சரிசெய்து கொடுக்கும்படி பலமுறை கோரியும், AC Sheet கட்டிடத்திற்கு தவறுதலாக RCC லாகட மதிப்பில் வரிவிதிப்பு செய்திருப்பதை திருத்தி மாநகராட்சி வரி திருத்தி விதிப்பு செய்து கேட்பு அறிவிப்பு அனுப்பி வைக்கவில்லை.

ஆகவே, மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்கும்படி பணிவுடன் பிரார்த்திக்கிறேன்."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 26.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 16.04.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.03.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி ஆணையாளர் தனது 06.04.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

''தற்சமயம் மதுரை மாநகராட்சியில் சட்டமன்ற தேர்தல் 2026 தேர்தல் பணி பார்க்கப்பட்டு வருகிறது. தேர்தல் பணிக்கான அத்தியாவசிய பணிகள் பார்க்கப்பட்டு வருவதால் தாங்கள் குறிப்பிட்டுள்ள 16.04.2026 அன்று நேரில் ஆஜராக இயலாத நிலை உள்ளது. எனவே, சட்டமன்ற தேர்தல் பணிகள் முடிவடைந்த பின்னர் மாற்று தேதியை தெரிவிக்கும்பட்சத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முறையீட்டு மனு தொடர்பான விசாரணையில் கலந்து கொள்ள ஏதுவாக மாற்று தேதி தெரிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

5. இதனை தொடர்ந்து, 16.04.2026 அன்று நடைபெறவிருந்த விசாரணையை மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டதை மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவ 15.04.2026 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மனுதாரர் 16.04.2026 அன்று விசாரணையில் கலந்து கொள்வதற்கு முன்னதாகவே ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டபடியால் மனுதாரரின் சூழ்நிலையினை கருத்தில் கொண்டு அவரிடம் மட்டும் 16.04.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

6. இந்நிலையில் மனுதாரர் தன்னுடைய 16.04.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

''நான் தங்களுக்கு 26.04.2025 தேதி அன்று மனு ஒன்றை அனுப்பி வைத்து இருந்தேன். எங்களது வரி விதிப்பின் எண் 115/042/903907 ஆகும். மேற்படி எண்ணில் கேட்பு அறிக்கை 1–ல் முதல் தளம் 566 + 580 சதுர அடி RCC என உள்ளது. கேட்பு அறிக்கை 2–ல் 1146 சதுர அடி RCC என உள்ளது. இந்த இரு அறிக்கையிலும் தவறு உள்ளது. எங்களது இடத்தில் முதல் தளம் 580 + 102 சதுர அடி மட்டும் உள்ளது. அந்த இடத்தில் இலேசு தகரத்தினால் ஆன அமைப்பு உள்ளது. ஆகவே, தாங்கள் தயவு செய்து மறு முறை அளவீடு செய்து உள்ளது உள்ளபடி RCC மற்றும் இலேசு தகரம் அவற்றிற்கு உரிய மதிப்பினை இட்டு தவறுகள் அற்ற கேட்பு அறிக்கை கொடுக்கும்படி நான் தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

7. மேலும், மனுதாரர் 16.04.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A, கட்டிடத்தை G.R.பாலகிருஷ்ணன் (1), G.A பாஸ்கரன், G.A. விஸ்வநாதன் (2), G.D. குமரேஷ் (3) ஆகிய மூவரும் வரிப்பிரிவினை செய்து கொடுக்கும்படி மனு சமர்ப்பித்தோம். வரிப்பிரிவினை செய்ததில் எனக்கும், எனது சகோதரர் G.A விஸ்வநாதன் ஆகிய இருவருக்கும் சொந்தமான RCC மற்றும் AC Sheet கட்டிடத்திற்கு AC Sheet விகிதத்தில் வரிவிதிப்பு செய்யாமல் தவறுதலாக RCC லாகட கட்டிடத்தின் மதிப்பின் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது.

எங்களது வரி விதிப்பு எண்.115/044/903907 ஆகும். எங்கள் கட்டிடம் அடித்தளம் மற்றும் முதல் தளம் கொண்டதாகும். அடித்தளம் 1806 சதுரடியாகும். அடிதளத்திற்கு அளிக்கப்பட்ட கேட்பு அறிவிப்பில் தவறு ஏதுமில்லை. ஆனால் அதேவரி விதிப்பு எண்ணிற்கு முதல் கேட்பு அறிக்கையில் முதல் தளம் 566 + 580 சதுரடி RCC என உள்ளது. இரண்டாவது கேட்பு அறிக்கையில் 1146 சதுரடி RCC என உள்ளது. எனவே முதல் தளம் பொருத்தவரை இந்த இரண்டு கேட்பு அறிக்கையும் தவறானது.

உண்மையில் இலேசு தகரத்தினால் ஆன முதல்தளம் 580+102 சதுரடி ஆகும். மேலும் இந்த இலேசு தகரத்தினால் ஆன முதல் தளத்திற்கு ஒரு சதுரடிக்கு ரூ.13.50 என வரி விதிப்பு செய்யப்பட வேண்டும். ஆனால் RCC தளத்திற்கான வரியான ஒரு சதுரடிக்கு ரூ.18.00 என தவறாக விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, எங்கள் இடத்தினை மறு அளவீடு செய்து RCC மற்றும் இலேசு தகரம் ஆகியவற்றிக்கு அதற்குரிய சரியான வரி விதிப்பினை விதிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

8. மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளர் கோரியிருந்தவாறு மேற்கண்ட மனு தொடர்பாக எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.04.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டு, மனுதாரருக்கும் நகலிடப்பட்டது.

9. இந்நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 23.05.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி மண்டலம்–4 (தெற்கு) வார்டு எண் 42, கதவு எண் 136A, காமராஜர் சாலை (135–120) சுவான்தாரர் பெயர் திரு. G.A. பாஸ்கரன், திரு. G.A. விஸ்வநாதன் சொத்து வரி விதிப்பு எண்.115/042/903907 கட்டிடத்திற்கு சொத்துவரி பிரிவினை செய்யப்பட்டதில் மேற்காணும் முறையீட்டு மனுதாரர் Enhancement working Sheet–ல்

| | |
|---|---|
| தரைத்தளம் RCC | 1806 ச.அடி |
| முதல்தளம் RCC | 1146 ச.அடி |
| **மொத்தம்** | **2952 ச.அடி** |

என்ற அளவில் 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.86,887/– என கேட்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர் முதல்தளம் AC Sheet என்பதற்கு பதில் RCC என சொத்துவரி Working Sheet-ல் வருகிறது என்றும் அதனை சரி செய்து தர மனு செய்ததை தொடர்ந்து நேராய்வு செய்து

| | |
|---|---|
| தரைத்தளம் RCC | 1806 ச.அடி |
| முதல்தளம் RCC | 566 ச.அடி |
| முதல்தளம் AC Sheet | 580 ச.அடி |
| **மொத்தம்** | **2952 ச.அடி** |

என்ற அளவில் 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.92,100/– என கேட்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபித்து முதல் தளம் முற்றிலும் AC Sheet மட்டுமே உள்ளது. எனவே அவற்றிற்கு உரிய சொத்துவரியை ஏற்படுத்தி தருமாறு நேரடியாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். அதன் அடிப்படையில் சொத்துவரி கட்டிடம் நேராய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண் W.P.(MD) No.8739/2026 ஆக மேற்காணும் கோரிக்கை வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 01.04.2026–ல் தீர்ப்பாணை வரப்பட்டுள்ளது. தீர்ப்பாணையில் உதவி ஆணையாளர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி Working Sheet வழங்கி கேட்பு ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கையின்படியும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வு வழக்கின் தீர்ப்பாணையின்படியும் மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி சொத்து வரி விதித்து அதற்கான Working Sheet மற்றும் கேட்பு வழங்கப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

10. மனுதாரர் 25.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''தாங்கள் 26.05.2026 தேதி அன்று நேரில் வருமாறு அழைப்பாணை விடுத்த கடிதம் கிடைக்கப் பெற்ற விவரம் அறிந்தேன். அன்றைய தினம் என்னால் தங்கள் முன் ஆஜராக இயலவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறேன். நான் 16.04.2026 தேதி அன்று தங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து தங்கள் முன் ஆஜராகி எனது வாக்குமூலம் தந்துள்ளேன். 16.04.2026 தேதி நான் கொடுத்த வாக்குமூலத்தையே 26.05.2026 தேதிக்குரிய பதிவாக ஏற்று எதிர்மனுதாரரின் கருத்தினையும் பெற்று தக்க நடவடிக்கை எடுத்து நீதி வழங்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

11. எதிர்மனுதாரர் சார்பில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி வருவாய் அலுவலர் 26.05.2026 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மதுரை C.M.R. ரோடு, கதவு எண் 4A, B.B.ரோடு என்கிற முகவரியில் வசிக்கும் G.A பாஸ்கரன், திரு.G.A விஸ்வநாதன் ஆகியோரின் சொத்து வரி விதிப்பு எண்.115/042/903907 கட்டிடத்திற்கு சொத்துவரி பிரிவினை செய்யப்பட்டதில் பின்வருமாறு கட்டிடத்தின் அளவீடுபடி.

| | |
|---|---|
| தரைத்தளம் RCC | 1806 ச.அடி |
| முதல்தளம் RCC | 1146 ச.அடி |
| மொத்தம் | 2952 ச.அடி |

மேலும் 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.86,887/– என கேட்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் முதல்தளம் முற்றிலும் AC Sheet மட்டுமே உள்ளது என்று தெரிவித்தை தொடர்ந்து நேராய்வு செய்து,

| | |
|---|---|
| தரைத்தளம் RCC | 1806 ச.அடி |
| முதல்தளம் RCC | 566 ச.அடி |
| முதல்தளம் AC Sheet | 580 ச.அடி |
| மொத்தம் | 2952 ச.அடி |

என்ற அளவில் 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.92,100/– கேட்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபித்து முதல் தளம் முற்றிலும் AC Sheet மட்டுமே உள்ளது என உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் மனு செய்து மனுதாரரின் சொத்துவரி கட்டிடம் நேராய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண்.W.P.(MD) No.8739/2026 வழக்கு தாக்கல் செய்து அதன் தீர்ப்பு நாள் 01.04.2026 அன்று வரப்பட்டுள்ளது. தீர்ப்பாணையில் உதவி ஆணையர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி working sheet வழங்கி கேட்பு ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வு வழக்கின் தீர்ப்பாணையின்படி மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி சொத்து வரி விதிக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் வணிக பயன்பாட்டிற்குரிய RCC மற்றும் AC SHEET கட்டிடத்திற்கு வரி விதிப்பில் எந்தவித வேறுபாடும் இல்லை என்ற விவரத்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வின் தீர்பாணை நாள் 01.04.2026–ன் நகலினை ,இம்முறை மன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கின்றேன்.''

12. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கடிதம் மற்றும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A என்ற விலாசத்தில் உள்ள கட்டிடத்தை G.R.பாலகிருஷ்ணன் (1), G.A பாஸ்கரன், G.A. விஸ்வநாதன் (2), G.D. குமரேஷ் (3) ஆகிய மூவருக்கும் வரிப்பிரிவினை செய்து கொடுக்கும்படி மனு அளிக்கப்பட்டது என்பதும், வரிப்பிரிவினை செய்ததில் தனக்கும், தனது சகோதரர் G.A விஸ்வநாதன் ஆகிய இருவருக்கும் சொந்தமான RCC மற்றும் AC Sheet—ல் உள்ள அடித்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட கட்டிடத்திற்கான வரி விதிப்பு எண்.115/044/903907–ல் AC Sheet என்ற விகிதத்தில் வரிவிதிப்பு செய்யாமல் RCC லாகட கட்டிடத்தின் மதிப்பின் அடிப்படையில் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், 1806 சதுரடி கொண்ட தரைத்தளத்திற்கு அளிக்கப்பட்ட கேட்பு அறிவிப்பில் தவறு ஏதுமில்லை என்பதும், எனவே தங்கள் இடத்தினை மறு அளவீடு செய்து RCC மற்றும் இலேசு தகரம் ஆகியவற்றிக்கு அதற்குரிய சரியான வரி விதிப்பினை விதிக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள, மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A என்ற முகவரியில் வசிக்கும் திரு. G.A பாஸ்கரன், திரு.G.A விஸ்வநாதன் ஆகியோரின் சொத்து வரி விதிப்பு எண்.115/042/903907 கட்டிடத்திற்கு சொத்துவரி பிரிவினை செய்யப்பட்டதில் 1806 ச.அடியில் உள்ள RCC தரைத்தளம் மற்றும் 1146 ச. அடியில் உள்ள RCC முதல்தளம் என உள்ளதற்கு 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.86,887/– என கேட்பு அனுப்பப்பட்டது என்பதும், மனுதாரர் முதல்தளம் முற்றிலும் AC Sheet மட்டுமே உள்ளது என்று தெரிவித்தை தொடர்ந்து, அதனை நேராய்வு செய்து, 1806 ச.அடியில் உள்ள RCC தரைத்தளம் மற்றும் 566 ச. அடியில் உள்ள RCC முதல்தளம் மற்றும் 580 ச.அடியில் உள்ள AC Sheet முதல்தளம் என்ற அளவில் 01.04.2024 முதல் அரையாண்டு சொத்துவரி ரூ.92,100/– கேட்பு அனுப்பப்பட்டது என்பதும், மனுதாரரின் ஆட்சேபனை தொடர்ந்து, மனுதாரரின் சொத்துவரி கட்டிடம் நேராய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண்.W.P.(MD) No.8739/2026 வழக்கு தாக்கல் செய்து அதன் தீர்ப்பு நாள் 01.04.2026 அன்று வரப்பட்ட தீர்ப்பாணையில் உதவி ஆணையர் அவர்கள் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி நேராய்வு செய்து சட்டபூர்வமான சொத்துவரி working sheet வழங்கி கேட்பு வழங்க உத்தரவிடப்பட்டதின்படி மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி சொத்து வரி விதிக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், வணிக பயன்பாட்டிற்குரிய RCC மற்றும் AC SHEET கட்டிடத்திற்கு வரி விதிப்பில் எந்தவித வேறுபாடும் இல்லை என்பதும் மதுரை மாநகராட்சி

மண்டலம் 4 (தெற்கு)—ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள, மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 4, வார்டு எண் 42, காமராஜர் சாலை, கதவு எண் 136 A என்ற முகவரியில் வசிக்கும் திரு. G.A பாஸ்கரன், திரு.G.A விஸ்வநாதன் ஆகியோரின் சொத்து வரி விதிப்பு எண்.115/042/903907—ற்கான AC Sheet முதல் தளம் உள்ள கட்டிடத்திற்கு சொத்துவரி விதிப்பது குறித்து, மனுதாரர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.(MD) No.8739/2026—ன் தீர்ப்பாணையில் 01.04.2026 அன்று ஆணையிட்டுள்ளவாறு மனுதாரர் முன்னிலையில் கட்டிடத்தினை நேராய்வு செய்து உரிய அலுவலர்கள் ஒப்புதல் பெற்று அதன்படி சொத்து வரி விதிக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மதுரை மாநகராட்சி மண்டலம் 4 (தெற்கு)—ன் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட கட்டிடத்தினை மனுதாரர் முன்னிலையில் நேராய்வு செய்து உரிய சொத்துவரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி மண்டலம்—4 (தெற்கு)—ன் உதவி ஆணையாளருக்கு உத்திரவிடுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026—ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 11—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G. A. பாஸ்கரன்,
எண் 136A காமராஜர் சாலை,
மதுரை—625 009.

(2) ஆணையர், மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை—625 002.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்—4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
C.M.R. ரோடு, மதுரை—625 009.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உ. திரி.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை—600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

15/6/26
செயலாளர்.
15/6
3/10